# மட்டக்களப்பில் தமிழரின் 12 வீடுகள் எரிப்பு

விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 66 திருவள்ளுவர் ஆண்டு 2025 சித்திரை 7 இதழ் 69
யாழ்ப்பாணம் புதன்கிழமை 20-4-1994

## ஒருவர் பலி; 15 பேர் காயம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள பனிச்சங்கேணிப் பகுதியில், இராணுவத்தினர், தமிழ் மக்கள் மீது மேற்கொண்ட கண்மூடித்தனமான துப்பாக்கிச்சூட்டில் ஒருவர் பலியானார். 15 பேர் படுகாயமடைந்தனர். 12 தமிழ் மக்களின் வீடுகளையும் இராணுவத்தினர் எரித்து சாம்பலாக்கி விட்டனர்.

கடந்த வாரம் இப்பகுதியில் கண்ணிவெடி ஒன்று வெடித்ததினாலேயே இராணுவத்தினர் இப்பகுதியை சுற்றிவளைத்து தமிழ்மக்கள் மீது தாக்குதல்களை நடாத்தினர்கள்.

(4-ம் பக்கம் பார்க்க)

## புலிகள் தடை விவாதம் சட்டசபையில் ஆரம்பம்

(சென்னை)

விடுதலைப் புலிகள் மீதான தடை உத்தரவு நீடிப்புப் பற்றிய விவாதம் இன்று தமிழக சட்ட சபையில் ஆரம்பமாகவுள்ளது.

தமிழ்நாட்டில் விடுதலைப் புலிகள் இயக்கத்தை மேலும் இருவருடங்களுக்குத் தடை செய்யும் பொருட்டு தமிழ்நாடு சட்டசபையில் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்று சட்டப்பேரவை முதல்வர் திரு. சேடப்பட்டி முத்தையா நேற்று அறிவித்துள்ளார்.

-ஸ-ஸ

★ வெளிநாட்டு தூதுவர்கள் மூலம்

# ‘எல்லாளன் படை’ எச்சரிக்கை

# மேற்கு நாடுகளுக்கு தெரிவிப்பு

## உல்லாசபயணிகளை வரவேண்டாமென அறிவுறுத்து

(கொழும்பு)

எல்லாளன் படையின் எச்சரிக்கையைத் தொடர்ந்து மேற்குலகத் தூதரகங்கள் தமது நாட்டு உல்லாசப்பயணிகளை இலங்கைக்கு வரவேண்டாமென எச்சரிக்கை செய்துள்ளன.

எல்லாளன் படை கடந்த வாரம் தத்தமது நாடுகளுக்கு சில நாட்டவர்களுக்கும் இரண்டு கிழமை நிலவரம் குறித்து அறிக்கைகள் விடுத்த எச்சரிக்கையை விடுத்துள்ளனர்.

எல்லாளன் படை விடுத்த எச்சரிக்கையை மேற்குலகத் தூதுவர்கள் நேற்று அவசர திருக்கும் எச்சரிக்கையினை ஜேர்மனி, இத்தாலி, பிரிட்டன் ஆகிய நாடுகள் இதனால் கூடுதலான ஆபத்துக்குள்ளாகும் என்று தெரிவிக்கப்படுகிறது.

(4-ம் பக்கம் பார்க்க)

## சிறிசேன குரேயை உடன் நாடு திரும்புமாறு அழைப்பு

(கொழும்பு)

வெளிநாடு சென்றிருக்கும் ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளரான சிறிசேன குரேயை உடனடியாக நாடு திரும்புமாறு ஐ.தே.க.வின் உயர்பீடம் அறிவித்தது. எனினும் நேற்று முன்தினம் பகல்வரை அவர் நாடு திரும்ப

(4-ம் பக்கம் பார்க்க)

## ஜெயலலிதா கூற்றுக்கு சவான் கண்டனம்

(புதுடில்லி)

தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு சீர்கெட்டு வருவதற்கு மத்திய அரசுதான் காரணமென்று முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா தெரிவித்துள்ளதை மத்திய உள்துறை அமைச்சர் எஸ்.பி. சவான் வன்மையாகக் கண்

(4-ம் பக்கம் பார்க்க)

## உல்லாசப் பயணிகள் வருகை இலங்கையில் வீழ்ச்சி!

(கொழும்பு)

வெடிகுண்டு வெடிப்புச் சம்பவங்கள் மரண மிரட்டல் சம்பவங்களை அடுத்து இலங்கைக்கு சுற்றுலாப் பயணம் மேற்கொள்ள விருந்த பல வெளிநாட்டவர்கள் தமது பயணத்தை இரத்து செய்து விட்டதாக சுற்றுலா பயணத் துறை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஆண்டுக்கு இருபது கோடி டொலர் வருமானத்தை ஈட்டிக் கொடுக்கும் இத்துறை பாதிப்பு பெரிதாக இருக்க கூடுமென சுற்றுலாத்துறை அதிகாரிகள் கவலை தெரிவிக்

(4-ம் பக்கம் பார்க்க)

## காணாமல்போன மீனவர் சடலம் மீட்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

கடந்த 17ம் திகதி இரவு 11 மணிக்கு கல்முனைக்கடற் பிரதேசத்தில் வைத்து கடற்படையினரின் துப்பாக்கிச் சூட்டினால் படுகாயமடைந்து காணாமற்போனவ மீனவரின்

(4-ம் பக்கம் பார்க்க)

## கிளாலி - பூநகரி படகுச் சேவை

(யாழ்ப்பாணம்)

கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று புதன்கிழமை வழமையான நேரத்துக்கு நடைபெறுமென விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர்.

## அன்னை பூபதி நினைவு தினம் எழுச்சியுடன் அனுஷ்டிப்பு

(யாழ்ப்பாணம்)

தற்கொடையாளி அன்னை பூபதியின் 6-ம் ஆண்டு நினைவுதின நிகழ்வுகள் தமிழ் பிரதேசமெங்கும் நேற்று எழுச்சியுடன் அனுஷ்டிக்கப் பட்டன.

சாத்தக நிலையங்கள் மற்றும் பொது நிறுவனங்களாவும் மூடப்பட்டு அன்னை பூபதிக்கு அஞ்சலி செலுத்தப் பட்டது.

வீடுகள் மற்றும் பொது இடங்கள் விடுதலைப்புலிகள் அலுவலகங்கள், சாவகச்சேரி துறைப்பணிமனைகள், நீதிமன்றங்கள் போன்றவற்றிலும் அன்னைபூபதியின் உருவப்

(4-ம் பக்கம் பார்க்க)

## வை. கோ. ஆதரவாளர் வெட்டிக் கொலை!

(சென்னை)

வை. கோபாலசாமி வழிநடத்தலில் இயங்கும் புரட்சி தி.மு.கவிலுள்ள பிரபல்யமான ஒரு தலைவரான இரா. ஏழுமலை வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

தி.மு.க ஆதரவாளரென சந்தேகிக்கப்படும் இருபது பேரடங்கிய ஒரு கோஷ்டி கொன்றுள் இவர் நேற்று முன்தினமிரவு வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

சென்னை இராயப்பேட்டையிலுள்ள இவரது இல்லத்திற்கு அருகில் கொலை செய்யப்பட்டார். கடந்த சனிக்கிழமை நடைபெற்ற கோபாலசாமியின் பேரணியை ஒழுங்கு செய்தவர்களில் ஏழுமலையும் ஒருவர்.

(4-ம் பக்கம் பார்க்க)

## மீனவரை நோக்கி பீரங்கித் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவு-கல்முனை கடற்பிரதேசத்தில் நேற்றுக்காலை மீன் பிடிக்கச் சென்ற மீனவர்களை நோக்கி சரமாரியான பீரங்கித் தாக்குதல்கள் கடற்படையினரால் மேற்கொள்ளப்பட்டது.

இத்தாக்குதலை அடுத்து மீனவர்கள் தமது வள்ளங்களையும் வலைகளையும் போட்டுவிட்டு நீந்திக் கரை சேர்ந்தனர். நேற்றுக்காலை 6மணியிலிருந்து 8 மணி வரை நடத்தப்பட்ட இத்தாக்குதல்களினால் அப்பகுதி மணியந் தோட்டம், பூம்புகார், பாஷையூர் பகுதிகளிலுள்ள மக்கள் மத்தியில் பெரும் பதற்றம் நிலவியது.

-59-134-ஸ

## வட-கிழக்கு மாகாணம் பற்றி நாடாளுமன்றில் சட்டபிரச்னை

(கொழும்பு)

அரசியலமைப்புச் சட்டத்தின் 13வது பிரிவின் எட்டாவது உபபிரிவில் இலங்கையின் ஒன்பது மாகாணங்கள் மிகத் தெளிவாக குறிப்பிடப் பட்டுள்ளது.

எனினும் இன்று அரசு தரப்பில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள பிரேரணையில் வடக்கு கிழக்கு மாகாணங்கள் ஒன்றென குறிப்பிடப்பட்டுள்ளது. இது அரசியலமைப்புச் சட்டத்துக்கே புறம்பானதாகும்.

(4-ம் பக்கம் பார்க்க)

